முதன்மை அட்டை உரிமையாளர்களினதும் துணை அட்டை உரிமையாளர்களினதும் உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்.

• காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் நியதி நிபந்தனைகளுக்கிணங்க அட்டை உரிமையாளரினது குடும்ப அங்கத்தவர்களுக்கு துணை அட்டையொன்றுக்கான வசதியை வங்கியானது தனது தனித்த தற்றுணிவின் அடிப்படையில் வழங்கலாம். கணக்கில் ஏதேனும் துணை அட்டையின் (அட்டைகளின்) உரிமையாளர் (உரிமையாளர்கள்) மற்றும் அதனை வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கும் அட்டை உரிமையாளர் ஆகிய இருவரும் அட்டையினை(அட்டைகளை) பயன்படுத்துவதால் ஏற்படும் அனைத்து கட்டணங்களுக்கும் இணைந்தும் தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள். துணை அட்டையொன்றுக்கான வசதி அடிப்படை அட்டை உரிமையாளரினது தொடர்ச்சியின் மீது தங்கியிருக்கும்.

• முதன்மை மற்றும் துணை அட்டை உரிமையாளர்கள் இருவரும் அட்டை கணக்கிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அதே மட்டுப்பாடுகளை பகிர்ந்துகொள்வார்கள்.

• முதன்மை மற்றும் துணை அட்டை உரிமையாளர்கள் இருவரும் அட்டையின் பயன்பாட்டினால் செயன்முறைப்படுத்தப்படும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கு இணைந்தும் தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள்.

• முதன்மை அட்டைதாரர் எழுத்துப்பூர்வ அறிவிப்பை அனுப்புவதன் மூலம் துணை அட்டை வசதியை இடைநிறுத்த முடியும்.

• முதன்மை மற்றும் துணை அட்டை உரிமையாளர்களுக்கு இடையிலே உள்ள எந்தவொரு பிணக்கும் முதன்மை மற்றும் துணை அட்டை உரிமையாளர்களின் பணிகள் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுளை பாதிக்கக்கூடாது.

• துணை அட்டை உரிமையாளரால் பெறப்பட்ட ஏதேனும் கட்டணங்கள் மற்றும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் செல்லுபடியானதாகும் என்பதோடு முதன்மை அட்டை உரிமையாளரினை பிணிக்கக்கூடியதாகவும் அவரினது பொறுப்புடமைக்கு உட்பட்டதாகவும் கருதப்படும்.

• துணை அட்டையின் செல்லுபடியாகும்காலம், முதன்மை அட்டையினது செல்லுபடியாகும்காலத்தில் தங்கியுள்ளது. முதன்மை அட்டை வங்கியினால் முடிவுறப்பட்டால் அல்லது முதன்மை அட்டை உரிமையாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் மூடப்பட்டால் துணை அட்டையும் மூடப்படும். எனினும் துணை அட்டையின் மூடுதலானது முதன்மை அட்டையின் செயன்முறையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்ப்படுத்தாது.

• நியதி நிபந்தனைகளை மீறும் வரை முதன்மை அட்டைகளுடன் துணை அட்டைகளையும் வங்கி தானாகவே புதுப்பிப்பு செய்யும்.